# யூன் – 02 – வெள்ளி

## புனித மார்செலினுஸ்

## “என்மீது அன்பு செலுத்துகிறாயா?” (யோ 21:15)

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 25 : 13 - 21**

அக்காலத்தில் அகிரிப்பா அரசனும், பெர்னிக்கியுவும் பெஸ்தைச் சந்திக்கச் செசரியா வந்தனர். அவர்கள் பல நாள்கள் அங்குத் தங்கியிருந்தபோது பெஸ்து பவுலுக்கு எதிரான வழக்கை அரசனிடம் எடுத்துக் கூறினார் ”பெலிக்சு கைதியாக விட்டுச் சென்ற ஒரு மனிதர் இங்கு இருக்கிறார். நான் எருசலேமி லிருந்தபோது தலைமைக் குருக்களும், யூதரின் மூப்பர்களும் அவரைப்பற்றிய வழக்கை என்னிடம் தெரிவித்து அவருக்கு எதிராகத் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் அவர்களைப் பார்த்து, ”குற்றம் சாட்டப்பட்டவர் எவரும் குற்றம் சாட்டியவர்க்கு முன் நின்று தம் மீது சுமத்தப்பட்ட குற்றத்தைப் பற்றி விளக்குவதற்கான வாய்ப்பைப் பெற வேண்டும். அதற்குமுன் அவருக்குத் தீர்ப்பு அளிப்பது உரோமையரின் வழக்கமல்ல” என்று கூறினேன். எனவே அவர்கள் இங்கே வந்தபோது, சற்றும் காலம் தாழ்த்தாமல் மறுநாளிலேயே நான் நடுவர் இருக்கையில் அமர்ந்து அவரை என்னிடம் கூட்டிக்கொண்டு வருமாறு ஆணை பிறப்பித்தேன். குற்றம் சுமத்தியவர்கள் எழுந்து பேசியபோது நான் நினைத்திருந்த கொடிய குற்றம் எதுவும் அவர்மீது சுமத்தவில்லை. அவர்கள் அவருக்கு எதிராகச் சொன்னதெல்லாம் தங்கள் சமயத்திலுள்ள சில கருத்து வேறுபாடுகளாகத்தான் இருந்தன. இறந்துபோன இயேசு என்னும் ஒருவரைப் பற்றியும் அவர்கள் பேசினார்கள். இந்த இயேசு உயிரோடு இருப்பதாக பவுல் சாதித்தார். இக்கருத்துச் சிக்கல்களைப் பற்றிக் கேட்டதும் நான் குழம்பிப்போய், ”நீர் எருசலேமுக்கு வருகிறீரா? அங்கு இவை பற்றி விசாரிக்கப்பட விரும்பகிறீரா?” எனக் கேட்டேன். பவுல், பேரரசரே விசாரித்துத் தீர்ப்பு அளிக்கும் வரை தம்மைக் காவலில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆதலால் இவரைச் சீசரிடம் அனுப்பும்வரை காவலில் வைக்குமாறு ஆணை பிறப்பித்தேன்.”

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது அரியனையை விண்ணகத்தில் நிலை நிறுத்தியுள்ளார்

**நற்செய்தி : யோவான் 21 : 15 – 19**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குத் தோன்றி சீமோன் பேதுருவிடம், ”யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று கேட்டார். அவர் இயேசுவிடம், ”ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!” என்றார். இயேசு அவரிடம், ”என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்” என்றார். இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், ”யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று கேட்டார். அவர் இயேசுவிடம், ”ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!” என்றார். இயேசு அவரிடம், ”என் ஆடுகளை மேய்” என்றார். மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், ”யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?” என்று கேட்டார். ”உனக்கு என்னிடம் அன்பு உண்டா?” என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், ”ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?”” என்றார். இயேசு அவரிடம், ””என் ஆடுகளைப் பேணிவளர். ”நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடிவந்தாய். உனக்கு முதிர்ந்த வயது ஆகும்போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவர் உன்னைக் கட்டி, உனக்கு விருப்பம் இல்லாத இடத்திற்குக் கூட்டிச்செல்வார் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்” பேதுரு எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப்படுத்தப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்ன பின் பேதுருவிடம், ”என்னைப் பின் தொடர்” என்றார்.

**தியானம்:** அன்பு என்பது எல்லோரையும் கட்டிபோடும் வல்லமை கொண்டது. பெற்றோர் பிள்ளைகளிடையேயான பிணைப்பு, சகோதர சகோதரிகளிடையே உள்ள அன்பு, நண்பர்களுக்கிடையே உள்ள அன்பு, கணவன் மனைவிக்கிடையிலான உறவு, இவ்வறாக பல வகைகளில் அன்பு வெளிப்படுத்தப்படலாம். இதில் சிறு பிளவு ஏற்பட்டாலும் உடைந்து போகிறது உறவு. உறவின் எல்லையும் அன்புதான், பிரிவின் எல்லையும் அன்புதான். நற்செய்தியில் யேசு பேதுருவிடம் கேட்பதும் அன்பு. நம்மைப் பார்த்துக் கேட்பதும் இதுவே. எம்மால் நம்மைப் படைத்தவரை முழுமையாக அன்பு செய்ய முடிகிறதா? எம்மை சூழ இடம்பெறும் நிகழ்வுகள், 3ம் உலகப்போர் தொடங்குமா என்ற பயம், எதிர்காலம் பற்றிய அச்ச உணர்வு, பலவகையான பெயர் தெரியாத நோய்களின் பாதிப்புகள், போதைவஸ்த்து பயன்பாடுகளின் ஆதிக்கம், இவையெல்லாம் மலைபோல் எம்முன்னே நிற்கின்றபோது எம்மால் உண்மையான அன்பை வெளிக்கொணர முடியுமா? எவ்வாறு புனித பவுல் தடைகளைத் தாண்டி பணி செய்தாரோ அவ்வாறு நாமும் இறைவழி நடக்க முன்வருவோம்.